தென்மொழி

RECEIVED
1975

கிறுக்கர் தம் வாலை அறுக்க!

இலக்கியத்தைத் தவிர்த்திடுக; கதைகளினி
எழுதற்க! எழுதினாலும்
துலக்கமிலா எந்தமிழர் வாழ்வுபெற
உண்மையினைத் துணிந்து சொல்க!
புலக்கவினால், கலைத்திறனால் தமிழினத்தைக்
கட்டழிக்கும் புல்லர் எல்லாம்
கலக்கமுற்றுப் போகும்படி எழுத்தினிலே
சூடேற்றிக் கனலச் செய்க!

பாட்டெழுதிக் கொண்டிருக்கும் படுகோழைக்
'கவிஞ'ரெலாம் பதை பதைக்க,
ஏட்டினிலே நெருப்பெழுத்தால் எந்தமிழ்ப்
பாவலர்கள் எழுதிக் காட்டி,
வாட்டமுறுந் தமிழினத்தைக் காத்திடுக!
வரலாற்றைப் புதுக்கச் செய்க!
ஆட்டமுறுங் கிறுக்கர்தம் வாலையெல்லாம்
ஒட்டறுத்தே அடங்கச் செய்க!

சுவடி : 12.
ஓலை : 9.

விலை :
ஓர் உருபா.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

புறப்பட்டாய், நீ!

உரிமையெனும் மெய்க்கொள்கை
தமிழர்க்கென்றும்
உயிர்க்கொள்கை; உயிரைவிட
உயர்ந்த கொள்கை!
நரிமையினும் கீழ்மையராம்
வடவர், உன்னை
நாய்மையினும் கீழெனவே
நடத்திவிட்டார்!

எரிநடுவண் இருந்ததுபோல்
இதுநாள் மட்டும்
இருந்துவிட்டாய்; உயர்மானம்
இழந்துவிட்டாய்!
கரிமையினும் கருமையுற்றாய்!
கடுகாய்த் தேய்ந்தாய்;
கனித்தமிழால் விழித்தெழுந்தாய்!
கனல்வாய் இன்றே!

புத்துணர்வு பெற்றுவிட்டாய்!
உடலுக்குள்ளே
புதுக்குருதி சுரந்ததின்று!
புறப்பட்டாய், நீ!
பித்துணர்வாய் அடிமைநலம்
பேசிவந்த
பெருவாயால் உரிமைநலம்
முழக்குகின்றாய்;

ஒத்துணர்வால் பகைப்புலத்தின்
வேரறுப்பாய்!
உட்பகையாம் பார்ப்பனர்தம்
உயிரைச் சீய்ப்பாய்!
கத்துணர்வால் பயனில்லைகாண்!
களிற்றுக் கூட்டம்
கனன்றெழுந்து விட்டதினிக்
கடுகல் நன்றே!

துரை-மாணிக்கம்.

" கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!



தென்மொழி
இலக்கிய இதழ்

[நிறுவனம் தி.பி: 1990 (1959)]

சுவடி: 12. ஓலை: 9.

ஆடவை-கடகம்-தி. பி. உ௰௬-ஆக∴சுடு.-'1975.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

உயர்ந்தது போர்க்கொடி!

உலகெங்கணுமுள்ள ஏறத்தாழ எட்டரைக் கோடித் தமிழ் மக்களும் வந்தேறிகட்கும், அந்தந்த நாட்டினர்க்கும், ஆங்காங்கு உள்ள பல்வேறு மொழியினர் இனத்தினர்க்கும் அடிமைகளாகவே வாழும் இழிவு நிலை, இயல்பு நிலையாகி விட்டது. கடந்த மூவாயிரம் ஆண்டுக் காலமாகப் படிப்படியாக அடிமையாகிவிட்ட தமிழன், தான் அடிமை என்பதை இன்னமும் உணராமல் கிடக்கிறான்; ஒப்புக்கொள்ள மறுக்கிறான். இன்று ஒருமைப்பாட்டு மந்திரத்தால் இந்தியனுக்கப் பெற்றுவிட்ட அவனுடைய மொழி, இலக்கிய, வாழ்வியல் பெருமிதமெல்லாம், அவன்றன் அடிமை வரலாற்றின்முன் கூனிக் குறுகி வீழ்ந்துபட்டன. பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் அவன் தலையெடுக்க வொட்டாமல் நிலைகுலைத்து விட்டன.

அறிவிலும் நாகரிகத்திலும் மிகவும் பின்தங்கிக் கிடக்கும் ஆப்பிரிக்கர்களுங் கூடத் தன்முனைப்பும், விடுதலை வேட்கையுங்கொண்டு விட்டனர். பொங்கியெழுந்து போராடி, வெற்றி பெற்றுவிட்டனர். ஆம்! ஆப்பிரிக்காவின் மேலைக் கடற்கரையில் உள்ள சாவோடோம், பிரின்சிப்பித் தீவுகள் விடுதலை பெற்ற தனி நாடாக அறிவிக்கப் பெற்றுவிட்டன. ஆங்கு உரிமைக்கொடி ஒளிவீசிப் பறக்கிறது! மொசாம்பி, அங்கோலா நாடுகளும் அவ்வாறே வீரப்போர் நிகழ்த்தி வெற்றிக்கொடி நாட்டிவிட்டன!

மேற்காணும் நாடுகளின் மக்கள் தொகை கோடியுமன்று ; நூறாயிரக் கணக்கே. அதிலும், சாவோடோம், பிரின்சிப்பித் தீவுகளின் மக்கள் தொகை எழுபத்து ஐயாயிரமே என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் தம் மறவுணர்வும், மான உணர்வும் வியக்கத்தக்கன ; போற்றிப் பாராட்டத் தக்கன. கடந்த ஐநூறு ஆண்டுக் காலமாகப் போர்ச்சுகீசியரின் ஆட்சிப் பிடியில் சிக்கிக்கிடந்த இச் சிறுநாடுகள் வீறுகொண்டு கிளர்ந்தெழுந்து வல்லாண்மையைத் தகர்த்தெறிந்து விட்டன. போர்ப்பரணி பாடி வெற்றி முழக்கமிடுகின்றன,

வங்கத்தவர்கள் தங்கள் நாட்டைப் பிரித்துக் கொண்டுவிட்டனர் என்பது நேற்றைய செய்தி !

ஆப்பிரிக்க நாடுகள் அடிமைத் தளையை அறுத்தெறிந்து வெற்றி முழக்கமிடுவது இற்றை நிகழ்ச்சி !

மறக் குலத்துத் தமிழ் மகனே ! அடிமையால் மரத்துவிட்ட நின் நரம்புகள் இன்னும் உணர்ச்சி பெறவில்லையா ? தொய்ந்துபோன நின் செவிப்பறை இன்னமும் கிளர்ச்சி யுறாததென்னை ? மங்கிப் போன கண்கள் ஒளி விளக்கம் பெறாததேன் ? காய்ப்பேறிப் போன தோள்கள் இன்னமுமா தினவு பெறவில்லை ?

தமிழனின் அடிமை வரலாறு, இனியும் நீடிக்கமுடியாது. எப்படிக்கும் முதற்படியாய், எந்நிலைக்கும் முன்னிலையாய் விடுதலை பெற்ற தமிழகம் வேண்டும் என்னும் வீர மறவர்களின் போர்ப்பறை ஒலிக்கின்றது !

'தமிழ்நாடு தமிழருக்கே' எனப் பொறித்துக் கொண்டும், துணை வரவும், செய்தி வெளியிடவும், விடுதலை மாநாடு என்னும் பெயரைப் பயன்படுத்தவும், துணிவும் தன்னுண்மையும் இன்றி, "ஆட்சேபகர மாநாடு" என்று அறிமுகப்படுத்தும் விடுதலை கெட்ட கோழை மணிகாள் ! நாளொரு கருத்தும் பொழுதொரு விளக்கமும் தந்து மக்களின் மன எழுச்சியினைத் திசை திருப்புவதிலேயே கண்ணுங் கருத்துமாய்ப் பொழுதைக் கழிக்கும் இனம்போன் றினமல்லா மோழை யணிகாள் ! இனியும் நும் எற்றும் ஏமாற்றும் நிலைநிற்க முடியாது. புறஞ் செல்லுமின் !

இதோ...! மாற்றார் மருள, அவர்தம் தலைகள் உருளப் புறப்பட்டு விட்டது புரட்சிப் பட்டாளம் ; உயர்த்தப் பெற்றுவிட்டது உரிமைப் போர்க்கொடி ! தில்லியருடைய, அவர்தம் கால் கைப்பிடிக்கும் புல்லியருடைய வல்லாண்மை இனிச் செல்லுபடியாகாது ! இடக்கு செய் வடக்கர் தம் அடக்குமுறை—ஆட்சிக் கோட்டைகள், இந்தி மொழிக் கொத்தளங்கள் யாவும் பொடிப் பொடியாய் நூறப் பெற்றுவிட்டன. ஒருமைப்பாட்டு முரசம் கண் கிழிந்துவிட்டது ! வெற்றி ! வெற்றி !!

தமிழ்நாடு தமிழருக்கே !

—இறைக்குருவன்.

மூன்றுவது

தமிழக விடுதலை மாநாடு

(நிகழ்ச்சிச் சுருக்கம்)

மிகவும் விரிவாகத் திட்டமிட்டும் தக்க முன்னேற்பாடுக ளுடனும், 1972–இல் திருச்சிராப்பள்ளியில் நடத்தப்பட்ட தமிழகப்பிரிவினை முதல் மாநாடும், 1973–இல் மதுரை மாநக ரில் நடந்த இரண்டாவது மாநாடும், நம் நோக்கு போக்கு களை ஆட்சியாளரும், பொது மக்களும் தெளிவாகவும் திட்டமாகவும் உணர்ந்து கொள்ளத் தக்க வாய்ப்பாக அமைந்தன. அதனினும் மேலாக நம்மோடு உடன் வந்தவர் களையும், உடனிருப்பவர்களை நாம் உணர்ந்துகொள்ளவும் அளவுகோல்களாகவும் அமைந்தன.

அவ்விரு மாநாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி களையும், அவற்றால் விளைந்த பயனையும், சீர்தூக்கிப்பார்த்து நாம் இனி மேற்கொள்ளவேண்டிய முயற்சிக்குத் திட்டமிட வும் அவை உதவின.

தென்மொழி அலுவலகம் இடமாற்றஞ் செய்யப்பெற்று நிலைப்படுத்தப் பெற்றது.

பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் மூன்றுவது தமிழக விடுதலை மாநாட்டைத் தலைநகரத்தில் நடத்தக் கருதி, அதற் கான அறிக்கையைத் 'தென்மொழி' (சுவடி 12; ஓலை: 7) இல் வெளி யிட்டார்கள். இந்நிலையில் உணர்ச்சி மிகு எழுத்தாளரும்; நீட்டோலை –நாளிதழ் ஆசிரியரும், தி.மு. கழகத்தில் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தவருமாகிய, திரு. அடியார் அவர்களும், மற்றும் சில அன்பர்களும். தென்மொழி இல்லத்துக்கு வருகை தந்து, தென் மொழிக் கொள்கைகளுக்கு, குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழகப் பிரிவினை முயற்சிகளுக்குத் தாம் ஒத்துழைக்கவும், உறுதுணை நிற்கும், எத்தகைய நிலையிலும் ஈடுபடவும் முன்வந்துள்ளமையைத் தெரிவித்தார்கள்.

நம் கொள்கை வலிவையும், துணிவையும் உணர்த்தும் வகை யில், இந்தியத் துணைக் கண்டத்தில் நெருக்கடி நிலை அறிவிக்கப் பெற்றிருக்கும் காலத்தில், அதுவும் 13-7-75 அன்றே மாநாட்டை நடத்துவதென்றும், அந்நாள் உலக வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பிரஞ்சுப் புரட்சி வெடித்த வீரத் திருநாளாதலால், அந்நாளில் நாம் விடுதலை மாநாடு நடத்துவது சாலவும் பொருத்தமுடையதென்றும், அன்று காலை ஊர்வலமும், மாலை சென்னைக் கடற்கரையில் மாநாடும் நடத்துவதென்றும் கருதி முடிவு செய்யப்பெற்றது.

மாநாட்டுச் செயற்குழு அமைப்புக் கூட்டத்திற்குத் தமிழ்நாட்டின் அகத்தும் புறத்தும் உள்ள மூகாமையான விடுதலை மறவர்கட்கு அழைப்பு விடுக்கப்பெற்று, அக்கூட்டம் 4—7—75 அன்று இரவு 7 மணி அளவில், எழுமூர் உலகத் தமிழர் இல்லத்தில் மாநாட்டு அமைப்பாளர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தமிழகத்திலிருந்தும் பிற பைதிரங்களிலிருந்தும் தமிழக விடுதலை-தென்மொழி மறவர்கள் இருபதின்மர் கலந்துகொண்டனர். நீட்டோலை அடியார் அவர்களும், இலங்கைத் தமிழர்க்கு ஒல்லும் வகையான் உறுபணியாற்றி வரும், பர் திரு. சனார்த்தனம், அவர்களும் கூட்டத்திற்குச் சிறப்பு வருகை தந்திருந்தனர்.

மாநாட்டு நெறியாளராகத் திரு. நீட்டோலை அடியார் அவர்களும், வரவேற்புக் குழுத் தலைவராகத் திரு. மறை. நித்தலின்பனார் அவர்களும், செயலாளர்களாகத் திருவாளர்கள் அரிமா.மகிழ்கோ, நா. இளமாறன் ஆகியோரும், பொருளாளராகத் திரு. அடியார்க்கருளி அவர்களும், செயற்குழு உறுப்பினர்களாகத் திருவாளர்கள். ப. முருகவேள், மா. கதிர்ச்சிவன், அரங்க. தமிழ்மணி, பொற்செழியன், ந. வை. இளஞ்செழியன், கலிய பெருமாள், கந்த. கண்ணன், பாவை. நடவரசன் ஆகியவர்களும் அமர்த்தப்பெற்றனர்.

மேற்காணும் குழுவிலுள்ளவர்கள் எல்லாவகையான நடவடிக்கைகளிலும் ஈடுபட முன்வந்தவராவர். ஏனையவர்களில் இந்நிலையினர் பலர், சில இன்றியமையாக் கரணியம்பற்றி அமைப்பாளரால் கட்டுப்படுத்தி வைக்கப்பெற்றனர். புறமுக நடவடிக்கைகளில் இக்கால் ஈடுபட வியலாமையால், அகமுகமாக ஒல்லும் வகையில் உறுதுணை நிற்பேம் என்ற நிலையினரும் சிலர் உளர்.

தமிழ் நெஞ்சங்களுக்கு வேண்டுகோள்.

பற்பல இன்றியமையாக் கரணியங்களான் மூன்றாவது தமிழக விடுதலை மாநாட்டைச் சடுத்த நிலையில் நடத்தவேண்டியிருந்தமையான், முன்கூட்டிப் பொருள் தண்டும் முயற்சி மேற்கொள்ளப்பெறவில்லை. விடுதலை மறவர்கள் சிறைக் காவலில் வைக்கப்பெற்றுள்ளனர். மாநாட்டுத் தொடர்பான செலவுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆதலின் தமிழ் நெஞ்சங்கள் தக்கவாறு பொருளுதவி செய்து உறுதுணை நிற்க வேண்டிக் கொள்ளுகின்றோம்,

—தாமரை பெருஞ்சித்திரன்.

இச்செயற்குழு அமைப்புக் கூட்டத்துக்கு உயர் திருவாளர்கள் நீட்டோலை அடியார் அவர்களும், பர். இரா. சனார்த்தனம் அவர்களும் வருகை தந்ததும், திருமிகு. அடியார் அவர்கள், எல்லாவகையிலும் நம்மோடு ஈடுபடவும், விடுதலை மாநாட்டுக்கும்; போராட்டத்துக்கும் ஒத்துழைக்கவும், உறுதுணை நிற்கவும் முன்வந்து, மாநாட்டு நெறியாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டதும் பெரிதும் வரவேற்கத் தக்கனவும் பாராட்டுக் குரியனவுமாய் அமைந்தன.

மாநாட்டுக்குப் பொருள் தண்டும் முயற்சி மேற்கொள்ளப்பெறவில்லை. அந்த அளவுக்குக் கால இடைவெளி இல்லாமையே கரணியம். கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அன்பர்களில் வாய்ப்புள்ளவர்கள் கணிசமான தொகை வழங்க ஒப்புக்கொண்டு சென்றனர்—சிலர் வழங்கினர். (பொருள் வரவு, செலவு பற்றிய குறிப்புகள் பின்னர் வெளிவரும்)

செயற்குழுக் கூட்டத்துக்கு வருகை தந்து செயலாண்மைப் பொறுப்பேற்ற திரு. அரிமா. மகிழ்கோ அவர்களும், அதற்கு முன்னரே வந்திருந்த திரு. அடியார்க்கருளி (மாநாட்டுப் பொருளாளர்) அவர்களும் தொடர்ந்து அலுவலகத்திலேயே தங்கி அறிக்கைகள், சுவரொட்டிகள் முதலியவற்றை அணியப்படுத்தல் அவற்றை ஆங்காங்கு அனுப்பிவைத்தல் முதலிய பணிகளில் முடுக்கமாக இயங்கிக் கொண்டிருந்தனர்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பெற்ற மாநாட்டு அறிக்கைகள், தமிழகத்திலும் பிற பைதிரங்களிலும் உள்ள பெரும்பாலான தாளிகைகளுக்கு விடுக்கப்பெற்றன. 10—7—75 அன்று மாலை, சென்னை மாரிசு விடுதியில் முறையாகச் செய்தியாளர் கூட்டம் கூட்டப்பெற்றுச் செய்திகள் விளக்கப்பெற்றன. அக் கூட்டத்திற்குச் செய்தியாளர்கள் முப்பதின்மர் வருகை தந்திருந்தனர்.

ஆயினும்... ....

மேற்படி செய்திகளை எந்தத் தாளிகையும் (சில நீங்கலாக) வெளியிடவில்லை. தமிழ்நாடு தமிழருக்கே என முகப்பில் அச்சிடும் விடுதலை உட்பட அனைத்துத் தாளிகைகளும் ஒட்டு மொத்தமாக இருட்டடிப்புச் செய்துவிட்டன.

ஆனால்...மறுநாள் மாநாட்டு அமைப்பாளர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்களும், நெறியாளர் திரு. நீட்டோலை அடியார் அவர்களும், மற்றவர்களும் சிறைப்படுத்தப் பெற்ற பின்னர், கட்சிகளுக்கு அப்பாற்பட்ட இயக்கத்திற்குக் கட்சி வண்ணம் பூசி வெளியிட அவை தவறவில்லை.

சென்ற மாநாட்டில் சிறை பிடிக்கப்பட்டபோது திராவிட கழகத்தினர் என்று நெஞ்சாரப் பொய் சொன்ன தாளிகைகள் இந்த மாநாட்டில் தி. மு. க. –வினர் என்று சற்றும் வெட்கமின்றி வெளி

யிட்டன. தமிழகப் பிரிவினை மாநாடு என்ற பெயரை வெளியிடவும் மதுகையின்றிப் பெரும்பாலான தொடை நடுங்கித் தாளிகைகள் "ஆட்சேபகர மாநாடு" என்று வெளியிட்டன. நேர்மை, அஞ்சாமை, நடுவு நிலைமை தாளிகை யறம் யாவும் விலையேறிவிட்டன போலும்! அன்றேல் பங்கீடு கிடைக்காதிருக்கலாம்.

இது நிற்க!

தமிழக விடுதலை இயக்கம் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, மொழி, இன, நாட்டு நலன்களையே அடிப்படையாகக் கொண்டது என்பதைத் திருச்சியிலும், மதுரையிலும் நிகழ்ந்த முதலிரு மாநாடுகளையும் அறிந்தவர்கள், அறிவார்கள். அவ்விரு மாநாடுகட்கும் எவ்வகை வேறுபாடுமின்றி அனைத்துத் துறைகளிலுமுள்ள அனைத்துத் தலைவர்களும் அழைக்கப் பெற்றார்கள். ஆயினும் விடுதலை மாநாடு என்றதும் மறுமொழி விடுக்கவும் மனவலிமையும் பெருந்தன்மையும் வாய்ந்தவர்கள் சிலரே. ஏனையோர் இனம் போன்று இனமல்லாதவர்களாகவும், விண்பட்ட கொக்கு, வல்லூறு கண்டன்ன விதிர் விதிர்ப்பவர்களாகவுமே இருந்தனர்.

திருச்சி மாநாட்டுக்குத் தென்மொழியன்பர்கள் அல்லாதவர்கள் என்ற வகையில் வருகை தந்தவர் திராவிடர் கழக மாவட்டத் தலைவர் ஒருவரேயாவர். அவ்வாறே மதுரை மாநாட்டுக்கு வருகை தர இசைந்தவர் தன்மானத் தந்தை, ஈ. வே. இராமசாமிப் பெரியார் ஒருவரே. இரு மாநாடுகட்கும் வருவதாகத் தெரிவித்த தமிழறிஞர்கள் இருவர் இறுதி வரை வரவில்லை. (இப்பொழுது காலமாகிவிட்டனர்)

சூலை 7, 8–ஆம் பக்கல்களில் விரிவான அறிக்கைகள் தாங்கிய தென்மொழி வெளிப்போந்தது.

11—7—75–ஆம் பக்கலன்று மாநாட்டு நெறியாளர் உயர் திரு அடியார் அவர்கள் "இதயந் திறந்து இதயத்தோடு பேசி; திரும்பாத இடம் போகிறேன்" என்னும் கட்டுரை வடிவ அறிக்கையொன்றை நீட்டோலையில் இருபக்க அளவில் வெளியிட்டார்கள். அத்துடன் மாநாடு பற்றிய விளம்பரமும் வெளியிடப்பெற்றது.

அன்று காலை 10-30 மணி அளவில் மாநாட்டு அமைப்பாளர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார், நெறியாளர் நீட்டோலைஅடியார். வரவேற்புக் குழுததலைவா திரு. மறை. நித்தலின்பனார், செயலர்கள் திருவினர் அரிமா மகிழ்கோ, நா. இளமாறன், செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் ந. வை. இளஞ்செழியன், ப. முருகவேள். ஆகியோர் காவல் துறையினரால் சிறைப்படுத்தப் பட்டனர். அன்று மாலை 2 மணி அளவில் மாநாட்டுப் பொருளாளர் திரு. அடியார்க்கருளி அவர்களும் சிறை பிடிக்கப் பட்டார்.

மறுநாள் 12—7—75 காரிக்கிழமை இரவு 10 மணி அளவில் செயற்குழு மாநாட்டு அலுவலகத்தில் கூடியது. சிறைபிடிக்கப் பெறுமல் எஞ்சியிருந்த செயற்குழு உறுப்பினர்களுடன் முனைப்புமிகு இயக்க மறவர்கள் இருபதின்மரும செயற்குழுவில் கலந்து கொண் டனர்.

தலைவர்களும் முன்னணியினரும் சிறைப்படுத்தப் பெற்றிருக் கும் இந்நிலையில் இயக்கத்தின் வலிமையையும், திறமான செயற் பாட்டு முறையையும் ஆட்சியாளரும், பொது மக்களும் உணரும் வண்ணம் திட்டமிட்டபடி, ஊர்வலம் உட்பட, மாநாட்டை நடத்து வதுதான் செயற்பாலது என்றும், எந்த நேரத்திலும் யாரும் சிறைப்படுத்தப் பெறலாம் என்னும் நிலை இருப்பதால், சிறைப்படா மல் இருக்கும் யாரும், இறுதிவரை மாநாட்டை நடத்தியே யாகல் வேண்டும் என்றும் முடிவு செய்யப்பெற்றது.

இரவு 12 மணி அளவில் செயற் குழுக் கூட்டம் முடிந்தது. அதன்பின், விடியுமட்டும் அன்பர்கள் ஊர்வலத்துக்குத் தேவையான கொடிகள், பதாகைகள் கொள்கை முழக்க அட்டைகள் முதலிய வற்றை அணியப் படுத்துவதிலும், சுவரொட்டிகள் ஒட்டுவதிலும் ஈடு பட்டிருந்தனர். இப்பணிகளில், திருவாளர்கள் சேலம் பாவரசன், வாய்மை இளஞ்சேரன், கோ. பழனி முதலியவர்கள் உழைப்பு பாராட்டுதற்குரியது.

கடந்த இரு மாநாடுகளிலும் ஊர்வலம் சிறப்பிடம் பெற்றது. திருச்சி மாநாட்டில் ஏறத்தாழ 12 கல் தொலைவு கொள்கை முழக்க மிட்டு வீறுநடையிட்ட ஊர்வலத்தை இடைமறித்துச்சூழ்ந்து தடைப் படுத்த முயன்று கொள்கை முழக்கத்தட்டிகள்,பதாகைகள், கொடிகள் முதலியவற்றைப் பிடுங்கிச் சென்றதும், அவ்வாறே மதுரை மாநாட் டிலும் ஊர்வலம் தடை செய்யப்பெற்று, அனைவரும் சிறைப்படுத் தப்பட்டதும் முன்னை நிகழ்ச்சிகள்.

இம்முறை மாநாட்டுக்கு இரு நாள் முன்னரே தலைவர்களும், முன்னணியினரும் சிறைப்படுத்தப் பெற்ற செய்தி, அற்றை நண் பகல் முதல் வானொலி வாயிலாகவும், செய்தித்தாள்கள் வாயிலாகவும் பரவி விட்டமையாலும், எந்நிலையிலும் மாநாடு நடந்தே தீரும் என் னும் செய்தியை நாம் உடனே பரப்புதற்குத் தக்க செய்தி பரப்பு ஏந்துகள் நம்மிடம் இல்லாமையாலும், வெளியூர் அன்பர்களில் சிலர் மாநாடு நிகழுமோ, நிகழாதோ என்னும் ஐயப்பாட் டோடும், மாநாட்டை எவ்வாறேனும் நடத்தியே தீரவேண்டும் என் னும் உறுதிப் பாட்டோடும் வந்திருந்தனர்.

சூலை 13......காலை 7 மணி, முன்னணியினரையும் மாநாட்டைத் தடைப்படுத்தி விடலாம் என்று எண்ணியவர்களின்

எண்ணம் தகர்ந்தொழியும் வண்ணம் முதல்நாள் இரவு தீர்மானித்த படி ஊர்வலம் அணியமாகிக் கொண்டிருக்கிறது.

அலுவலகத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த முனைப்பாளர்கள் திருவினர் பாவை. நடவரசன், பொற்செழியன், சின்னத் துரை, சு. கதிரவன், கோ. பழனி, துரை. மடங்கன், தமிழ்க்குமரன், இரா. அருட்குவை ஆகியோர் எண்மரும் காவல் துறையினரால் திடுமெனச் சிறைப்படுத்தப் படுகின்றனர். கொடிகள், பதாகைகள், கொள்கை முழக்கத் தட்டிகள் முதலியன கைப்பற்றிச் செல்லப்படுகின்றன.

அரிமா மறவர்களை ஏற்றிச்சென்ற மூடுந்து கண்ணுக்கு மறைந்த பின்னும் கொள்கை முழக்கம் எண்டிசையையும் அதிரச் செய்கின்றது......

அடுத்துக் காலை 10 மணி அளவில் மீண்டும் செயற்குழு கூடியது. சிறைப்படுத்தப் பெறுமல் இருக்கும் செயற்குழு உறுப்பினர் திரு. கந்த.கண்ணன் அவர்கள் தலைமையில் மாநாட்டை நடத்துவதென்றும், திருவாளர்கள் அரங்க. தமிழ்மணி, மா. ஆ. மாசிலாமணி, வாய்மை இளஞ்சேரன், வேலிறையன், சேலம் பாவரசன் ஆகியோர் ஐவரும் உரை முழக்குவதென்றும் முடிவு செய்யப்பெற்றது.

மாலை 5 மணி முதலே கடற்கரையில் மாநாட்டுக்கென மக்கள் அணியணியாக வந்து ஆங்காங்கு ஆர்வத்துடன் அமரத்தொடங்கி விட்டனர். மாலை 6 மணி அளவில் மாநாட்டுத் தலைவர் திரு, கந்த. கண்ணன் அவர்களும், திரு. அரங்க. தமிழ்மணி அவர்களும் உயர்த்திப் பிடிக்கப்பெற்ற விடுதலைப் போர்க் கொடிகளுடனும், "தமிழ்நாடு தமிழருக்கே! தமிழ் நிலத்தை விடுவிப்போம்! தில்லி ஆட்சிக்கு எல்லை கட்டுவோம்!'' என்பன போலும், விண்ணதிரும் வீர முழக்கங்களுடனும், இரு மிடுக்கான குதிரைகளில் பெருமிதமாக வீற்று, இவர்ந்து வந்த காட்சி, திரண்டிருந்த மக்களை மெய் சிலிர்க்கச் செய்தது.

அடுத்து, அறிஞர் அண்ணு அடக்கமேடையை அடுத்து, குறிப்பிட்ட இடத்தில் மாநாடு தொடங்கியது. மேடையின் இருபுறத்தும் மறவர் இருவர் சிவப்பு-நீல வண்ணமுடையதும், தமிழ்நாட்டுப்படம் வரையப் பெற்றதுமான தமிழக விடுதலைப் போர்க்கொடிகளைத் தூக்கிப்பிடித்து நிற்க ஏனையோர் மேடையில் வீற்றிருந்தனர்.

தலைவர் அவர்கள் குறிப்பிட்டபடி, திரு. அரங்க. தமிழ்மணி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர். அதன் சுருக்கம் வருமாறு :

"கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகப் பல காலக் கட்டங்களில், பல இனத்துக்கு தமிழினம் அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. இவ்

—(தொடர்ச்சி 21-ஆம் பக்கம் பார்க்க.)

நெஞ்சந் திறந்து - நெஞ்சோடு பேசி; திரும்பாத இடம் போகிறேன்!

—நீட்டோலை அடியார்.

இந்தக் கட்டுரையை அல்லது கடிதத்தைப் பல்வேறு உணர்ச்சிகளுடன் எழுதுகிறேன். இதைப் படிக்கும் அனைவரும் கடைசிவரை பொறுமையாக ஒரு செய்திக்குச் செவி சாய்ப்பார்களாக!

உங்கள் மனக்கதவுகள் திறக்கட்டும்; உங்களது ஈர நெஞ்சம் இன்னும் இளகட்டும்.

இதோ..................

எனது மனக்கதவைத் திறக்கிறேன். குருதி, சொட்டுச் சொட்டாய் விழுந்து......அதுவும் பல ஆண்டுகளாய் உறைந்து போயிருக்கிற காட்சியைக் காண்பீர்கள்.

ஏன் நெஞ்சத்தில் பிளவு? ஏன் குருதி சொட்டுச் சொட்டாய் விழுந்தது? எப்போது விழுந்தது? எப்போது உறைந்தது?

தோழர்களே!......

என் உள்ளம் கல்லூரி நாளில்......பிரிவினைப் பண்ணில்—விடுதலைப் பாட்டில் காதல் கொண்டது. அந்நாள் தொட்டு இந்நாள் வரை அந்தப் பாட்டு என் நெஞ்ச இசைமணி மண்டபத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

அந்த நெஞ்சத்தில் இசைத்த பாட்டினைப் பாடியவர்களின் பாசறையில் நான் சேர்ந்தேன். காலப்போக்கில் எங்கோ ஓர் உயரிய இடத்திற்கு அடித்து வரப்பட்டேன்.

எந்த இடத்திற்கு வந்தாலும்..........எத்தனை இரவுகள் இன்பமாய்க் கழித்தாலும்.........எத்தனை பகல்கள் பேசிச் சிரித்தாலும்....... அழுதாலும் வாய் வாளாது சாய்ந்திருந்தாலும்......

என்னுள்ளே அதே பண்....அதே...பாடல்!

ஆனால்..........

சீனப் படைபெடுப்பின் போது—பிரிவினைக் கோரிக்கை கைவிடப்படும் வேளையில்......

அந்தப் பாடல் உலவிய நெஞ்ச மணி மண்டபம் சுக்கு நூறுகியது; நெஞ்சத் தாமரை கிழிந்தது; அதிலிருந்து அரத்தத் துளிகள் சொட்டுச் சொட்டாய் விழுந்தன; உறைந்தன—12 ஆண்டுகள்!

அண்ணாவின் திருவுருவப் படத்தின் முன் கதறிக் கதறி அழுதிருக்கிறேன்.

என் கருத்தைச் சொல்லமுடியாத நிலை; தொழில் இடம்!

ஆனால், அழுவதைத் தடுக்க முடியுமா ? அழுதேன் ......அழுதேன்! சில இரவுகளில் தூக்கம் கலைந்து எழுந்து உட்காருகிறபோது அழுதிருக்கிறேன் ; விம்மி விம்மி—விக்கி விக்கி—தேம்பித் தேம்பி அழுதிருக்கிறேன்.

அழுத பிள்ளைக்குப் பால் என்பார்களே...அதுபோல அவ்வப்போது அண்ணன் சொல்லில் வெடிக்கும் விடுதலை வேட்டுகளை—மொழியில் மின்னலடிக்கும் பிரிவினைக் கீறல்களைக் கண்டு என்னை நானே தேற்றிக் கொண்டிருக்கிறேன்.

''பிரிவினையைக் கைவிட்டேன் ; பிரிவினைக்கான காரணியங்கள் உண்டு''.

"தமிழன் யாருக்கும் தாழான்; யாரையும் தாழ்த்தான் !"

—இவை போன்ற சொற்கள்......தனிமையில் அழாமலிருக்க அசைபோடும் சொற்கள் !

ஆனால்...இவை மட்டும் போதுமா ? இவைதாம் நாம் வாழ்நாள் வரை நெஞ்சப் பட்டயத்தில் அடித்துக் கொள்ளும் வரிகளா ?

இவைதாம் நமது கல்லறை வழிச்செலவின் கடைசி வரிகளா ? —எண்ணி எண்ணி ஏங்குவதுண்டு !

அரசியல் அலை ஓங்கி ஓங்கி அடித்தது. கப்பல் போய்க் கொண்டே இருந்தது. கப்பலின் மீகாமன் கூட்டத்தோடு அங்குமிங்கும், அல்லும் பகலும் வேர்வை சிந்திக்கொண்டே இருந்தேன்.

ஆட்சித் துறைமுகம்! வெற்றிப் புது நகரங்கள் ! சிறுபிள்ளை போல் கைகொட்டிச் சுவைத்து மகிழ்ந்தேன்.

ஆயினும்...உள்ளே அதே பாடல் ! அதே பண் !

இன்னும் எவ்வளவு தூரம் போகப் போகிறோம்; எத்தனை துறைமுகங்கள்; எத்தனை புது நகரங்கள் ?

ஆயினும் அந்தப் பாடலுக்குரிய....தீவை இன்னும் காணவில்லை !

நெருக்கடிப் புயல்தான் ! ஆளை விழுங்கும் திமிங்கலங்கள்தாம் ! கொத்திக் கிழிக்கும் சுறுக்கள்தாம் !

ஆயினும்....அதோ... அதோ......அந்தப் பாடலுக்கு உரிய தீவு என் கண்களில் தெரிகிறது.

தோணியை இறக்குகிறேன்; துடுப்பைப்போடுகிறேன்; தனிச்செலவு புறப்பட்டு விட்டேன்.

வாழ்த்துவோர் வாழ்த்துங்கள் ; வசை பாடுவோர் பாடுங்கள் ; கெடுத்து விட்டானே குடும்பத்தை — என்று முணுமுணுப்போர்

முணுமுணுத்துக் கொண்டிருங்கள். வளரவேண்டியவன் அழிந்து விட்டான் என்று கணக்கு எழுதும் கூற்றுவக் கணக்கர்கள் கணக்கெழுதுங்கள்.

திட்டமிடாமல் போய்விட்டான் என்று திட்டுபவர் திட்டுங்கள். பதட்டப்பட்டு விட்டான் என்று கூறுவோர் கூறுங்கள்.

பிழைக்கத் தெரியாதவன் என்று சப்புக் கொட்டுபவர் கொட்டுங்கள் !

நாட்டுக்கு இரண்டகம் செய்வோன்—தூக்கில் இடப்படவேண்டியவன்—துண்டு துண்டாய் வெட்டப்பட வேண்டியவன் என்று தூற்றும் தீ வழியினர் புழுதி வாரித் தூற்றட்டும் !

ஆனால், நான்—வரும் சூலை 13-ஆம் நாள், சென்னையில் அண்ணாவின் கல்லறைக்கு அருகிலிருந்து 'தனிநாடு' பண் பாடுவேன்! பிரிவினை வேண்டும் என முழங்குவேன்!

இந்த முடிவு இப்போது நான் எடுத்த முடிவன்று ; நீண்ட நெடு நாட்களாய் எறும்பூர்ந்த கற்பாறை இது ! நீண்ட நெடு நாட்களாய் நெஞ்சத் தேனீ கட்டிய தேன் கூடு இது !

என் எழுத்தையும் பேச்சையும் கூர்ந்து கவனித்தவர்கள் இதைப் புரிந்து கொண்டிருப்பார்கள். என் நடவடிக்கையை உற்று நோக்குபவர்கள் இதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். எனது தனிப்பட்ட உரையாடலில் இது தெறித்து விளையாடியதை உணர்ந்திருப்பார்கள்.

இன்று அனைத்துக் கட்டுகளையும் அறுத்துக் கொண்டேன். அனைத்து விலங்குகளையும் நொறுக்கி எடுத்து வீசிவிட்டேன். அனைத்துத் தளைகளிலிருந்தும் விடுதலை பெற்றுவிட்டேன் !

ஏ ! உலகமே !

எங்கள் அண்ணன், தடைச்சட்டம் வருகிறது எனத் தெரிந்ததும் பிரிவினையைக் கைவிட்டார் என்று வாய்—எட்டுக் கோணலாகக் கிண்டல் பேசினாயே....

இதோ...அந்த அண்ணனின் கடைசித் தம்பி....

அச்சுறுத்தும் நெருக்கடி நிலைச் சட்டங்கள்—

ஆள் தூக்கிப் பாதுகாப்புச் சட்டம்—

தடுப்புக் காவல் சட்டம்—

மிசா—போசா....சட்டங்கள்.

இத்தனை அச்ச நெருக்கடிகளிலும் அதே அண்ணனின் தம்பி பிரிவினையைக் கேட்கிறான் !

எங்கள் அண்ணன் மீதும் — அவரது படை மீதும் நீ வீசிய வீண் பழிச்சேற்றை.........தன் உயிர்—பொருள் —உடலை ஈடுவைத்துத் துடைக்கிறான்!....இது போதும் எனக்கு !

இருட்டறை இருந்தால் காட்டு...முடங்கிக் கொள்கிறேன் !

கல்லறை இருந்தால் காட்டு—என் உடலை முடக்குகிறேன் ! கொலைமேடை இருந்தால்...சொல்....என் தலையை வைக்கிறேன்.

முடிந்தது வாழ்க்கை எனும் முடிவுடனேயே புறப்படுகிறேன் ; திரும்பமாட்டேன் எனும் நெஞ்ச உரத்துடனேயே புறப்படுகிறேன் !

தமிழகமே ! தாயகமே !

நான் காணாமல் போனதற்குப் பின்னால் நீ கண்திற ! நான் காவு கொடுக்கப்பட்டதற்குப் பின்னால் உன் மனக்கதவு திறக்கட்டும்!

என் அரத்தம் இந்த மண்ணில் பட்ட பின்னால் இந்த மண்ணுக்கு ஒரு விடிவு வரட்டும் !

என் உடலம் இந்த நிலத்தில் விழுந்த பின்னால் ஒரு எழுச்சி வரட்டும்... அது போதும் !

என்னரும் ஆசானே ! தலைவர்களே !

என்னரும் ஆசானே ! உங்களுக்கொரு இக்கட்டான நிலையை நான் வைத்து விட்டேன். உங்கள் கால்களைப் பிடித்துக் கெஞ்சுகிறேன்; இத்தகைய நிலையில் உங்களை வைத்ததற்காக !

பதினேழு ஆண்டுக் காலம் நீங்கள் சொல்வதை எல்லாம் நான் கேட்டேன். இன்று நீங்கள் சொல்வதற்கு முன்னால் — நீங்கள் என்ன சொல்வீர்கள் எனத் தெரிந்து நான் உங்களுக்கு மாறுபாடான ஒரு நிலையை மேற்கொண்டு விட்டேன்.

வில்லி பாரதத்தில் சொல்லியது போல — "என்னை உலகிற்குக் காட்டியவனே !"

இன்று உன் அன்புக் கட்டிலிருந்தும் பிணைப்பிலிருந்தும் மாறுபட்டு இந்த நிலையை நான் மேற்கொண்டு விட்டேன்.

மணிவாசகர் சொன்னதுபோல், "பால் நினைந்தூட்டிய தாயே!"

இன்று உனது பாலையும் மறந்து — நீ ஊட்டிய பாங்கையும் மறந்து மணற்சுரத்தின் வழியே தனிச்செலவு போகத் துணிந்து விட்டேன்.

ஒருவேளை உன் கைகளில் நான் மாட்டிக்கொண்டால், "வேண்டாம்; பிரிவினை! விட்டுவிடு!"—என்றுதான் சொல்வாய் !

ஆனால், தலைவனே !

உனது அன்பைவிட...நீ முன்னொரு காலத்தில் பாடிய பிரிவினைப் பண் எனக்கு விருப்பமானது.

உனது அருளைவிட...நீ முன்னொரு காலத்தில் அண்ணாவிடம் இரந்து நின்றாயே அந்தக் களச் சாவு இனிமையானது.

ஒளிவு மறைவு இல்லாமல்-ஒரு துளியும் மதிப்புக் குறைவில்லாமல் சொல்கிறேன்.

தலைவனே ! உன்னைவிட...நான் விடுதலையை அதிகமாக நேசிக்கிறேன்.

விடுதலைக் கிளி – சிறைச்சாலை மதிலிலிருந்து அழைக்கிறது. நான் போகிறேன். விடுதலைப் பறவை இடுகாட்டுக் கல்லறையிலிருந்து அழைக்கிறது. நான் போகிறேன்?

கடைசியாக ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறுவேன் !

ஏசு கிறித்து ஒருமுறை "அரையனுக்குரியதை அரையனுக்குத் தாருங்கள்"-என்று கூறியதுபோல்...

எனக்குரிய தண்டனையை எனக்குத் தாருங்கள் ! சற்றுக் கடுமையாகவே தாருங்கள்.

சிறைச்சாலையில் எனக்கோர் இடம் ஒதுக்கப்பட்டிருந்தால்... சிறைச்சாலைக்கு ! கொலை மேடையில் ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருந்தால்... கொலை மேடைக்கு ! எதற்கும்–எப்போதும் செல்ல அணியமாயிருக்கிறேன் !

தலைவனே ! என்னை இப்போது நீ வெறுப்பாய் ! முகம் திருப்புவாய் ! ஆட்சித் தலைவனுக்குரிய அறம் வழங்குவாய் !—தெரியும் !

ஆரூர்ச் சோழனே ! தண்டனைக் குரியதைச் செய்யப் போகிறேன். உனது தேரைக் கொண்டு வா ! தேர்க் காலில் என்னை இடு ! முடி !......

ஆனால்...நீ முறை தவறாத சோழன்; மகனே தவறு செய்தாலும் தண்டிக்கும் பண்பாளன் என்ற பெயர் உனக்கு வர வேண்டும் ! அதுபோதும் எனக்கு ! விடைபெறுகிறேன் !

மதிப்பிற்கும் வணக்கத்துக்குமுரிய தலைவர்களே !

தோழமைக் கட்சியோரே !

'அடியார்'—'அடியார்'—என்று அன்புத் தேனொழுக அழைத்தீர்களே....அவன் கண்காணாத இடத்திற்குப் போகப் போகிறான்.

களவு புரிந்தன்று; கள்ளக் கடத்தல் செய்தன்று; கள்ள வாணிகம் புரிந்தன்று! காளைப் பருவத்திலிருந்து உள்ளம் ஏற்ற கொள்கையை வெளிப்படையாகச் செய்வதற்காகத் தண்டனை ஏற்கப் போகிறான்.

போகிற பாதை சரியில்லை என்பீர்கள்! மன்னிக்கவும். உங்கள் நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள்! எனது பாதையில் நான் போகிறேன். மீள்வது இல்லை எனும் நீள் நினைப்போடுதான் போகிறேன்; விடை பெறுகிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர்களே!

உங்களைக் காலமெல்லாம் கடுமையான சொற்களால் தாக்கியவன் நான்.

ஒருவேளை உங்கள் கண்ணில் படாதவன்—கவலைப்பட வேண்டியவனல்லாதவன் எனும் பட்டியலில் இருக்கலாம்.

அதைப்பற்றி எனக்கும் கவலையில்லை. ஆனால் உங்களில் சிலர் எனது எழுத்துக்கு மதிப்புத் தருவோர் உண்டு!

"வைதாலும் தமிழால் வைகிறான்" — என்று வாழ்த்துவோர் உண்டு. அந்தப் பெருந்தன்மை மிக்க பெருந் தலைவர்களின் அகவைக்குரிய மதிப்பை - வணக்கத்தைச் செலுத்துகிறேன் - புறப்படுகிறேன்.

ஆனால், சிற்சிலர் இந்த கொள்கைச் செலவைப் பகடி பேசக் கூடும். பழி போடக்கூடும்!

அந்த இழி பிறவிகளுக்குச் சொல்வேன்! என் துணைவியரின் கூந்தல்மேல் ஆணையாக, என் குழந்தைகளின் இளம் குருதியின் ஆணையாக நான் நெஞ்சத் தூய்மையோடு தூய எண்ணத்தோடு பிரிவினை முழக்கமிடுவதைப்பற்றிப் பழி பேசுபவரின் நா...அழுகிபோகும்!

பகடி பேசுவோன் வானத்தில் பறந்தால் விழுந்து ஒழிவான்; தரையில் ஊர்ந்தால் தரைமட்டமாவான்! வீட்டில் படுத்தால் விட்டம் விழுந்து சாவான்! சிரிப்பிற்கன்று இதைச் சொல்வது-எரியும் நெருப்பிற்குச் சமமான நெஞ்சக் குமுறலோடு கூறுகிறோம். தூய நெஞ்சைப் பழிப்போனின் நெஞ்சம் கிழிபடும்-நாளைவரும் காளைபர் படையால்!

ஆகவே, இந்த எதிரித் தலைவர்களுக்குரிய எச்சரிக்கையோடு விடை பெறுகிறேன்.

புரட்சி நடிகர் அவர்களே !

[இவரைத் தனியாக அழைத்து ஒரே ஒரு சொல்தான் கூற வேண்டும்.]

உங்களது இயக்கத்தில் இந்த எண்ணம் கொண்ட வீர மறவர்கள் பலர் இருக்கிறார்கள். உண்மையான அண்ணாவின் தனி நாட்டுத் தம்பிகள் இருக்கிறார்கள்.

அவர்களை எல்லாம் இந்திரா அடிமையாக்கி விடாதீர்கள். ஐயகோ கே. ஏ. கிருட்டிணசாமி ஆயிரம் தலையை வெட்டட்டும் ; தாங்கிக் கொள்ளலாம். ஆனால்... இந்திரா அடிமை போலச் சில நாட்களுக்கு முன் புலம்பியிருக்கிறாரே ...... அதைத்தானய்யா தாங்கிக் கொள்ளவில்லை; கணியூர் குடும்பத்தின் வாயிலிருந்தா 'அனைத்திந்தியத் திருப்போற்றி' வரவேண்டும் ?

ஐயா ....

அருள்கூர்ந்து அனைவரையும் 'கே.ஏ.கே.' ஆக்கிவிடாதீர்கள் !

ஆ.... அண்ணா அவர்கள் "நடுவண் அரசுடன் மோதமாட்டேன்" —என்று சொன்னாரே ...எனக்கூறி விடாதீர்கள் !

உங்களுக்கொரு கணக்கு கூறுகிறேன் ... !

1949-இல் திருவாரூர் மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்களால் முன் மொழியப்பட்டது. . .பிரிவினைத் தீர்மானம் !

1969 வரை அதே பிரிவினைக் கொள்கைதான் நமது கொள்கை !

இருபது ஆண்டுகள் சொல்லப்பட்ட கொள்கை பெரிதா ? இடையில் நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் கொள்கை பெரிதா ? கொஞ்சம் எண்ணிப்பாருங்கள் !

விடுதலைப் போருக்கு—பிரிவினைக் கிளர்ச்சிக்கு நீங்கள் உங்கள் தோழர்களை அனுப்புங்கள் என்று நான் கூற வரவில்லை; கூறவும் மாட்டேன்.

ஆனால்...இளைய தலைமுறையை இந்திய அடிமை ஆக்கி விடாதீர்கள்; இந்திரா அடிமை ஆக்கி விடாதீர்கள். இளைஞர் கூட்டத்தை இறைச்சிக் கடைக்கு அனுப்புவதுபோல் தில்லி ஆட்டுத் தொட்டிக்கு அனுப்பி விடாதீர்கள்- ஐயா !

இந்த வேண்டுகோளோடு விடைபெறுகிறேன்.

பொதுவுடைமைத் தோழர்களே !

வலதுகள் என்றால் உங்களுக்குச் சினம் வரும். அதனால்தான் பொதுவுடைமைத் தோழர்கள் என்று அழைத்தேன்.

உங்களுடன் பொதுவுடைமை இலக்கிய மொழியில் உரையாடுவதில் தனிப்பயிற்சி உண்டு !

ஆனால் இந்தநேரத்தில் அதை நடத்தப்போவதில்லை. ஆனால் ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் சுட்டிக் காட்டுகிறேன்.

தோழர் கல்யாணசுந்தரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்த போது, ஓர் ஐயம் கேட்டேன் !

சோவியத்து உருசியாவிலுள்ள துர்க்கமெனித்தான்...தாசித்தான் போன்ற குடியரசுகள் மொழியால்-பண்பாட்டால்-இனத்தால் ...உருசிய இனத்திலிருந்து மாறுபட்டவை. ஆனால் அவையனைத்தும் உருசிய ஒன்றியத்தில் இருக்கின்றன!

ஆனால் சார் ஆட்சியில் உருசியாவின் ஒரு பகுதியாக இருந்த போலந்து தனி நாடு கிளர்ச்சியை நடத்தித் தனி நாடாகவே போய் விட்டது. ஏன் அதை மறுபடியும் சோவியத்து ஒன்றியத்தில் சேர்க்கவில்லை ?

தாசித்தானுக்கும்-துர்க்கமேனித்தானுக்கும் அனைத்து உரிமைகளும் உருசிய ஒன்றியத்தில் இருக்குமென்றால்...அதே அனைத்து உரிமையும் போலந்திற்கும் கிடைக்குமே? ஏன் அது தனி நாடாயிற்று ?

மங்கோலிய இனத்தைச் சேர்ந்த சீனா ஒரு நாடு—கொரியா ஒரு நாடு—வியட்டுநாம் ஒரு நாடு....என்றிருப்பது சரியா ?

அறிவுள்ள பொதுவுடைமைகள் அடித்துப் பிடித்து ஒரு நாட்டை தனியே அமைத்துக்கொண்டால், அது பொதுவுடைமை ஒப்பம் பெற்றது ஆகிவிடும் அன்றோ?

இவற்றைத்தான் பொதுவுடைமை —கல்யாணசுந்தரம் அவர்களிடம் கேட்டேன். அவர் வாய் திறக்கவில்லை.

அதன்பிறகு இலெனின் நூல்களையும், மார்க்சு நூல்களையும் இரவு எண்ணெய் எரித்துப் படித்தபோது ...

ஒவ்வொரு நாட்டின் பிரிவினை இயக்கங்களையும் போட்டிபோட்டுக்கொண்டு ஆதரித்திருக்கிறார்கள்.

ஓர் இனம் பிரிவினை கேட்பதை எதிர்ப்பவன் பொதுவுடைமையாளன் அல்லன்; நயவஞ்சகன்; முட்டாள்—என்றுகூட இலெனின் வசை பாடியிருக்கிறார். (இருப்பு — உரோசா இலக்சம்பர்க்குடன் நடத்திய உரையாடல்)

இத்தனைக்கும் பிறகு நீங்கள் இங்கே பிரிவினைப் பூச்சாண்டி காட்டுகிறபோது உள்ளபடியே நான் மலைத்துப் போகிறேன்.

ஓர் உண்மையை உங்களுக்குச் சொல்வோம். நாங்கள் தனி நாடு கேட்பதுகூட......அண்ணன் அன்றே கூறியதுபோல் பொது வுடைமைப் பூங்கா அமைக்கவே தவிர, தனிவுடைமைப் படுகுழி அமைக்கவன்று!

இன்றைக்கிருக்கிற சில பொதுவுடைமைகளை விட அதிகமாகப் பொதுவுடைமைத் தாய்ப்பால் அருந்திய வர்கள் தனிநாடு கேட்போர்!

பொதுவுடைமை நூல்களை எழுத்தெண்ணிப் படித்தவர்கள்; பொதுவுடைமை ஆட்சி வரவேண்டும் என்று ஆசைப்படுபவர்கள்; தேவைப்பட்டால் அந்த இறுதிப் போருக்குப் போர்க் கருவிகள் தாங்கவும் அணியமாக இருப்பவர்கள்.

ஆனல், நீங்கள் என்ன செய்கிறீர்கள்? பொதுவுடைமைப் பேராசிரியர்கள் சொல்லித் தந்த பிரிவினைக் கொள்கையிலிருந்து நழுவி ஓடுகிறீர்கள்!

இலெனின் கொடுத்த நயவஞ்சகன்; முட்டாள் பட்டம் வந் தாலும் சரி—இந்திரா ஆதரவுக் கொள்கையைக் கைவிடோம் என்று முழங்குகிறீர்கள்.

சோவியத் நாட்டின் தாசித்தான் பொதுவுடைமைக் கட்சியாகத் தான் இருக்க விரும்புகிறீர்களே தவிர—

பழைய உருசியாவின் போலந்துப் பொதுவுடைமைக் கட்சியாக இருக்க விரும்பவில்லை நீங்கள்!

இந்த வரலாற்றுத் தவறுக்காக நீங்கள் மன்னிப்புக் கேட்கும் காலம் மிகு தொலைவில் இல்லை!

ஆனல்...போலந்துப் பொதுவுடைமைக்கட்சியின் நிலையிலிருந்து தன்னந்தனியாகக் குரல் கொடுக்கும் இந்த எளியோனுக்காக உங்க ளால் எதுவும் செய்யமுடியாது.

எதுவும் செய்ய முடியாதவர்களிடமிருந்து எதுவும் சொல்லாம லேயே விடைபெறுகிறேன்!

மார்க்கசியத் தோழர்களே!

ஒருவகையில் உங்கள் பேச்சு—எழுத்து—செயல் தனி நாட் டிற்கு ஆதரவு தெரிவிக்கும் முறையில் மின்னலிடுவதைப் பார்த் திருக்கிறோம்.

இந்தி எதிர்ப்புப் போரில் தோளோடு தோள் நின்று வீரப்போர் புரிந்ததைக் கண்டு மகிழ்ந்திருக்கிறோம்.

ஒரே இந்தியா என்பது முதலாளிகள் கொள்ளையடிப்பதற்குரிய ஒரே சந்தை (மார்க்கட்) என்று நீங்கள் 'தீக்கதி'ரில் கூறியதைக் கேட்டுப் பூரித்திருக்கிறோம்.

ஆனால் நெருக்கடி நிலை வந்ததும் உங்கள் பேச்சுகளை எதிர் பார்க்கிறோம்; காணவில்லை. ஆணையிடப்பட்ட 'தீக்கதிர்'—தினமணி யைப்போல் ஆசிரியவுரை எழுதாமலேயே விடுகிறது.

உங்கள் போர் முறைகளைப் பற்றி அறியும் வாய்ப்பும் இல்லை; உங்களைக் காணும் வாய்ப்பும் இல்லை.

காண முடியாத தோழர்களிடம், கூற முடியாத சொற்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விடைபெறுகிறேன்.

தி. மு. க. தோழர்களே!

இருபதாண்டுகள் உங்களிடம் உடன்பிறப்பாய்ப் பழகிய உங்கள் இளவல் விடைபெறுகிறேன்.

உங்களோடு சிரித்து—உங்களோடு அழுது—உங்களோடு அழு துண்டு—உங்களோடு மாநாட்டுப் பந்தலில் படுத்துறங்கி—உங்க ளுக்காகச் செய்திகளைத் தா... 17 ஆண்டுக்காலம் கதிரவன் எழு வதையே பார்க்காது தாளிகைத் தொழிலில் உழைத்தவன்....விடை பெறுகிறேன்.

கழகத்தை எந்தப் பெரு....மகன் தொட்டாலும் ஏரண ஈட்டியால் அவனது திமிர் ஈரலைக் குத்தி எடுத்தவன்—

அரசியல் வல்லாள கண்டர்களை ஏரண வலையால் மீன் குஞ்சு களாய்ப் பிடித்திழுத்துக் கரையில் போட்டவன்—

எந்த நெருக்கடி வந்தாலும்—தேர்தல் வந்தாலும் அண்ணன் தமிழால்—ஆசானின் மொழியால் எழுச்சிக்குத் துணை நின்றவன்—

ஏன்...1971-ஆம் ஆண்டு...சென்னை கல்கி தோட்டத் தில் நம்மை அப்போது எதிர்த்த இராசாசியின் செய்தி யாளர் நேர் காணலில் ஒரு மணி நேரம் கேள்விக் கணை யால் அவரை நிலைகுத்திப் போகச்செய்தவன்....

'அண்ணா ஒரு காவியம்'......முதலாக 'தமிழனுக்குத் தோல்வி இல்லை' ஈருகக்....கழக நாடகங்களை எழுதியவன்—நடித்தவன்...

இப்படி அறிவு கெட்டுப்போனானே...என்று வருத்தப்படுங்கள். ஆனால் என் வழிக்கு வந்து விடாதீர்கள்.

இது தனி வழி! என் ஒருவனை மட்டுமே போக விடுங்கள்!

தி. மு. கழகம் — ஆயிரங் காலத்துப்பயிர்! நானோ வானில் பறந்து செல்லும் பூந்தாது!

தி. மு. கழகம்—அரிய நாவாய்! நானோ....தீவு தேடிச்செல் லும் கட்டுமரம்!

தி. மு. கழகம்—நாற்படை செல்லும் அரச பாட்டை! நானோ - வில்லேந்திய வீரன் செல்லும் ஒற்றையடிப் பாதை!

தி. மு. கழகம் உங்களுக்கென்றே கிடைத்த அரிய அமைப்பு! அதன் தலைமை—வாராது வந்த மாமணி! அதைக் காப்பதே உங்கள் கடமை!

தோழர்களே!

நான் போகிறேன்—இரண்டகனாக இல்லை. நெடுங்காலம் என்னைத் துளைத்தெடுத்த துயரத்தைப் போக்கிக் கொள்பவனாக!

எனக்காக... நீங்கள் ஏதாவது செய்ய நினைத்தால்...

வாழ்க்கையில் என்றாவது ஒருநாள்....இப்படி ஒரு கொள்கைப் பித்தன் இருந்தான் என்று நினையுங்கள்; அது போதும்!

தோழர்களே! எனக்காக நீங்கள் ஏதாவது செய்ய நினைத்தால்...

நானிருக்கும் சிறையின் பக்கம் போகிறபோது உங்கள் கண்களை அந்தப்பக்கம் திருப்புங்கள் அதுபோதும்.

தோழர்களே! எனக்காக நீங்கள் ஏதாவது செய்ய நினைத்தால்...

என் பிள்ளைகள் ஏதிலியராகத் தெருவோரத்தில் போகும்போது அழைத்து ஒரு முத்தம் கொடுங்கள்! அது போதும்!

தோழர்களே! இவற்றைத்தவிர வேறு எதையும் நான் உங்களிடம் இரந்து வேண்டவில்லை! விடை பெறுகிறேன்.

கட்சிகளுக்கு அப்பால்......

கட்சிகளுக்கு அப்பால் இருக்கிற தமிழ் மறவர்களே! விடுதலை விரும்பிகளே! பிரிவினைப்பண் பாடத் துடிப்போரே! உங்களை அழைக்கிறேன். நீங்கள் விரும்பினால் என்னுடன் வரலாம்.

சூலை 13 ஆம் நாள்—

சென்னையில் பிரிவினை மாநாடு! அண்ணாவின் கல்லறைக்கு அருகிலுள்ள கடற்கரை வெளியில்!

துணிவுள்ளோர் வருக! தூய்மை நெஞ்சுடையோர் வருக! துயிலாது - பிரிவினைப் பண்-எத்தனை ஆண்டாயினும்!—என முழக்கமிடுவோர் வருக!

குடும்பம்—அன்பு—தளை—பற்று—அனைத்தும் எனது தாயக விடுதலைக்குப் பின்...என நினைப்போர் வருக!

குடும்பம்....குடும்பம் எனப் பதறுவோரே! சின்னச்சாமியும், அரங்கநாதனும் மற்ற அரிமாத் தமிழர்களும் செத்தார்களே...அவர்களென்ன வெற்றுக் கட்டைகளா?

விடுங்கள் — சாக்குப் போக்கை! வீரம் இருந்தால் வாருங்கள்—சென்னைக்கு!

நெருக்கடி நிலை — பாதுகாப்புச் சட்டம் — தடுப்புக் காவல் சட்டம் — மிசா—போசா சட்டங்கள்.

இத்தனை இருந்தும் அரிமா நெஞ்சத் தமிழர்கள், செந்தமிழ் நாட்டுப் பிரிவினை கேட்டார்கள்—எனும் வரலாற்று வரிகள் எழுதப்படட்டும்!

சூலை 13 ......!

இது ஒரு வரலாற்று நாள்-பிரெஞ்சுப் புரட்சி முகிழ்த்தெழுந்த நாள்! தமிழகத்துப் புரட்சி முகிழ்த்தெழப் போகும் நாள்!

அந்நாளில்...........அடலேறுகளென.........சென்னைக்கு வருவீர்!

புகைவண்டியில் வந்தாலும்........பேருந்தில் வந்தாலும்.......

சென்னை பாரகன் திரையரங்கிற்கு அருகில் வாருங்கள்!

அங்கே....பிறவி மறவர் படையாம் 'தென்மொழி'ப் பட்டாளம் நிற்கும், அதன் துணைப் படையாவீர்!

அங்கே கட்டளைகள் பிறக்கும்! கடமையாற்றிடும் எண்ணத்தோடு வாருங்கள்! கடுஞ்சிறைக்கு ஏகும் நினைப்புடன் வாருங்கள்!

உலகைக் குலுக்கும் செய்தி பிறக்கும், ஊர்வலம் எடுப்போம்!

பின்னர்...கடற்கரையில் மாநாடு!

திட்டம் இது! அடக்குமுறைச் சட்டங்கள் நொறுங்கப்போகும் திட்டம் இது!

அண்ணன் சொன்னார்; இதற்காகவே சொன்னார்;

“இருப்பதும் ஒருயிர்தான்; அது போகப் போவதும் ஒரு முறைதான்! பிரிவினைக்காக அது போகட்டும்!

அண்ணன் சொல் ஏந்தி.......ஆற்றல் மறவர்களே! அரிமா ஏறுகளே! அழியாத வரலாற்றுச் சிற்பிகளே! சிறைக்கு அஞ்சாத வீரர்களே! திறவோர்களே!

வாரீர்! வாரீர்! வாரீர்! வாரீர்!

[இக்கட்டுரை 11—7—75-அன்று "நீட்டோலை"யில் வெளி வந்தது.]

—[8–ஆம் பக்கத் தொடர்ச்சி]
வடிமை நிலையினை உணராது விடுதலை வேட்கை இல்லாது மடிந்து கிடக்கும் தமிழினத்தைத் தட்டி எழுப்புவதே எப்பணிக்கும் முதற் பணி! தமிழனின் குருதியில் உணர்வுச் சூடேற்றுவதுதான் தலையாய கடமை! இவ்வடிப்படையிலேதான் தமிழக விடுதலை இயக்கம் கடந்த இரு மாநாடுகளை நடத்தியது. இந்த மூன்றாவது மாநாடும் நடக்கிறது. நாங்கள் தடைகளை எதிர்பார்த்துத்தான் வந்திருக்கின்றோம். தண்டனைகளை எதிர்நோக்கித்தான் அமர்ந்திருக்கிறோம். நேற்றை முன்னாளும், இன்று காலையும் ஈரணியினர் சிறைப்படுத்தப் பட்டுள்ளார்கள் இப்போது மூன்றாவது அணியாக நாங்கள் இங்குச் செயற்படுகிறோம். தடைகளைப் பொருட்படுத்தாது ஆர்வம் பொலியும் முகத்தோடும், அஞ்சாமை நிரம்பிய மனத்தோடும் வருகை தந்துள்ள அனைவருக்கும் வீர வரவேற்பு கூறுகின்றேன்."

இவ்வரவேற்புரையை அடுத்துத் தலைவர் திரு. கந்த. கண்ணன் அவர்கள் தலைமையுரை யாற்றினார்கள். அதன் சுருக்கம்.

"இம் மாநாட்டை நடத்தவொட்டாமல் தடுக்கும் நோக்கோடு இயக்கத் தலைவர்களையும் முன்னணியினரையும் அரசினர் சிறைப் படுத்தி விட்டார்கள். ஊர்வலத்தை ஒருவாறு முறியடித்து விட்டார்கள், இப்படியெல்லாம் செய்து விட்டமையாலேயே விடுதலையுணர்வைக் கட்டுப்படுத்தி விடலாம் என்றும், மக்களின் மன எழுச்சியை மட்டுப்படுத்திவிடலாம் என்றும், உரிமை வேண்டுவோரை ஒடுக்கிவிடலாம் என்றும் எண்ணுவார்களேயானால், அது வெறும் பகற்கனவேயாகும்.

இன்று சூலை 13–ஆம் நாள்! இந்நாள் புரட்சியாளர்களுக்குப் பொன்னாள்! பிரஞ்சுப் புரட்சி பீறிட்டெழுந்த வீரத் திருநாள்!

இம்மாநாடு சிறு தொகையினரால் நடத்தப்படுகின்றது. இம் மேடையில் அறுவர் தாம் வீற்றிருக்கின்றோம். மாநாடு நிகழாது என்று எண்ணுபவர்களுக்கு அறைகூவல் விடுத்துக் கொண்டிருக்கின்றோம். இவ்வறுவரும் ஆறாயிரவராக, ஆறு நூறாயிரவராக வளர்வதற்கு நெடுங்காலம் பிடிக்காது. உலகம் வியக்கும் பிரஞ்சுப் புரட்

தமிழ்ச்சிட்டு அன்பர்களுக்கு
ஓர் அறிவிப்பு.

ஆசிரியர் பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழக விடுதலை இயக்கத் தொடர்பாகச் சிறைப்படுத்தப் பெற்றுள்ளமையாலும், வேறு சில இன்றியமையாக் கரணியங்களாலும், இம்மாதம் வெளி வரவேண்டிய தமிழ்ச்சிட்டு [குரல்: 8 இசை: 8] அடுத்த இதழுடன் இணைந்து வெளி வரும் என்பதை இதன்வழி தெரிவித்துக் கொள்கின்றோம்.

—அமைச்சர்.

சியை நடத்தியவர்கள் அறுநூறு வீர மறவர்களே என்பதை இப்பொழுது உங்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

வடவர்கள் நம்மை அடிமைகளாக்கி, அடக்கியாண்டுக்கொண்டு இருக்கின்றார்கள். அடிமைத் தமிழர்கள் அவர்களுக்கு அடிவருடிக் கிடக்கின்றார்கள். நம்மை இழி மக்களாக்கி வைத்திருக்கும் தில்லி ஆட்சிக்கு எல்லை கட்டவேண்டும். அதற்கு இம் மாநாடு எழுச்சியூட்டும் என்று கூறிக் கொள்ளுகின்றேன். எஞ்சியவற்றை முடிவுரையில் கூறுவேன்''.

அடுத்துத் திருவாளர் மா. ஆ. மாசிலாமணி அவர்கள் உரையாற்றினார்கள். அதன் சுருக்கம் வருமாறு :

''தமிழன் அரசியலாலும், பொருளியலாலும், மொழியியலாலும், வாழ்வியலாலும், இன்ன பிறவற்றாலும் அயலினத்துக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றான். தமிழினத்துக்கு மிகமிகப் பின் தங்கிய இனத்தவர்களெல்லாம், இன்று உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கும் போது, தமிழன் தான் இருக்குமிடந் தெரியாது மறைக்கப்பட்டுக் கிடக்கின்றான். ஒருமையின் பெயரால் அவன் உரிமைகளை இழந்து நிற்கிறான். இவ் விழி நிலையைப் போக்குவதற்குத் தலையையே விலையாகக் கொடுக்கவும் தயங்காத மறவுணர்வோடுதான் தடை பல கடந்தும், இம் மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கின்றோம். நம் தமிழ்நாட்டை விட மிகமிகச் சிறிய நாடுகள் பலவும் இன்று உரிமை பெற்று விளங்கிக் கொண்டிருக்கின்றன. ஒருமைப்பாடு என்ற பெயராலும், நெருக்கடி நிலை என்ற பெயராலும், தமிழனின் அடிமை நிலைக்கு இரட்டைப் பூட்டு போடப் பெற்றுள்ளது. இந்நிலை இனியும் நீடிக்கமுடியாது. புரட்சி கிளர்ந்து எழுந்துவிட்டது! வீணர் மடிவதும், நாம் வெற்றி பெறுவதும் திண்ணம்! திண்ணம்!!"

அடுத்துத் திருவாளர் வேலிறையன் அவர்கள் முழக்கமிட்டார். அதன் சுருக்கம் வருமாறு :

"நாம் வாழும் நாடு நமக்கு உரிமையாக வேண்டும்" என்னும் நமது கொள்கை குற்றம் எனப்பட்டு மூன்னிரண்டு அணியினர் சிறைப்பட்டாலும், சற்றும் சளைக்காது அறுவர் நிகழ்த்தும் இம் மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்து ஏளனமாகப் பேசுவோர், பகடி பண்ணுவோர்; சூடு சுரணையற்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். நாங்கள் விடுதலை பெற்ற தமிழகம் வேண்டும் என்பது எங்களுக்கோ எங்கள் குடும்பத்தார்க்கோ மட்டுமா? எண்ணிப் பாருங்கள்! தமிழ் நிலத்தின் உள்ளும் புறமும் இருக்கும் ஏறத்தாழ $8\frac{1}{2}$ கோடி தமிழ் மக்களின் அடிமை மாசினைத் துடைத்தெறிவதற்காக வன்றோ? அவர்தம் மிடிமை நிலையை மாற்றுவதற்காக வன்றோ? உலகத் தமிழர்களே ஒன்று சேருங்கள்! உண்மைத் தமிழர்களே ஒன்று சேருங்கள்! அடிமை விலங்கொடிப்போம். அன்னைத் தமிழை அரியணை ஏற்றுவோம்!''

அடுத்துத் திருவாளர் சேலம் பாவரசன் அவர்கள் முழங்கிய உரைச் சுருக்கம் வருமாறு :

"இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரிலே நாம் தமிழர் என்று சொல்லிக் கொள்ளவும் முடியாமல் இந்தியர் என்னும் தளையிட்டு நம்மை யடக்கியாண்டுக் கொண்டிருக்கிறது வடநாட்டுக் கெடுதலைக் கும்பல். நம் மொழியினை நாம் பேணிப் போற்றி முன்னேறும் முயற்சிகளில் ஈடுபட வொட்டாமல் நம் மண்டைகளில் இந்திச் சாணியை எந்த வடிவத்திலாவது திணித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அடிமைத் தளையை அறுத்தெறிந்து அயலவர் பிடியினின்றும் விடுபட்டு, உரிமை வாழ்வு வாழும்-வாழ்விக்கும் குறிக்கோளோடு துணிந்து நிற்கின்றோம்.

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை

என்னும் பாவேந்தர் பாட்டு எமது போர்ப்பாட்டு."

அடுத்துத் திருவாளர் வாய்மை இளஞ்சேரன் அவர்கள் கோளரிபோல் கொள்கை முழக்கமிட்டார். அவர் உரையின் சுருக்கம் வருமாறு :

"இயக்கத் தலைவர்கள்-விடுதலை உணர்விலே விஞ்சியவர்கள் நேற்றைக்கு முன்னாள் சிறை பிடிக்கப் பெற்றார்கள். அவர்களிலே எஞ்சியவர்கள் இன்று காலைபிற் சிறைப்படுத்தப் பட்டார்கள். அவர்களிலும் மிஞ்சியவர்கள் இப்போது மாநாடு நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

எங்களையும், எங்களுக்குப் பின்னால் அணியணியாகத் திரண்டிருக்கும் வீர மறவர்களையும் சிறைப்படுத்தி விட்டமையால் எமது போராட்டம் நிற்காது. உரிமை வேட்கை தணியாது! தமிழ்க் குருதியோடும் ஒற்றைத் தமிழன் இருந்தாலும் அவன் செங்குருதியின் அணுக்களுங்கூட எழுந்து போராடும் என்பதை எதிரிகள் உணர்ந்து கொள்ளட்டும் !

நாங்கள் போராடுவதைப் பார்த்து, நீங்கள் விடுதலை வாங்கி விடுவீர்களா ? அது முடியுமா ? யார் யாரோவெல்லாம் உயர்த்திய தலைகளை உள்ளுக்கிழுத்துக் கொண்டார்களே ! என்று கேட்பவர்களுக்கு, கேட்க நினைப்பவர்களுக்குக் கூறிக்கொள்வேன் ; நாங்கள் போராடுவது நாளைக்கே விடுதலை பெற்றுவிடுவோம் என்று எண்ணிக்கொண்டு அன்று. என் காலத்தில் இல்லாவிட்டாலும் என் மகன், பேரன், கொள்ளுப்பேரன் காலத்திலுங்கூட இல்லாவிட்டாலும், பின்வரும் பிறங்கடைக் காலத்திலேனும் விடுதலை பெற வேண்டும்; தமிழ்நாடு தனி நாடாகித் தமிழர் நாடாகி உரிமையோடு தமிழர்கள் வாழவேண்டும் என்பதற்காகவேயன்றி வேறில்லை. தமிழன் தமிழ்நாட்டில் மட்டுமா வாழ்கிறான் ? அல்லது இந்தியாவில் மட்டுமா வாழ்கிறான் ? இலங்கையில், சிங்கப்பூரில், மலேசியாவில்,

கடாரத்தில், சாவகத்தில், மோரிசில், ஆப்பிரிக்காவில் மற்றும் உலகின் பிற பகுதிகளில் வாழ்கிறான். ஆனால் தமிழினத்திற்கு-உலகில் முன்தோன்றி மூத்த குடி மக்களுக்கு உரிமையான நிலம்— விடுதலையான நாடு இல்லை. தமிழர்கள் பிறந்த இடத்திலும், பெயர்ந்து சென்ற இடத்திலும் அடிமையாக வாழும் இழி நிலைக்கு முடிவு கட்டுவோம். தமிழினத்துக்குத் தனிநாடு வேண்டும். அந்தக் கொள்கை மறவர்கள் கூடியுள்ளோம். ஆரியப் புரட்டை அடியோடு வீழ்த்தித் தில்லி ஆட்சிக்கு எல்லை கட்டுவோம் !

திரண்டுவிட்டது மறவர் கூட்டம் !
தீர்ந்துவிட்டது பகைவர் ஆட்டம் !

இறுதியில் மாநாட்டுத் தலைவர் அவர்கள் முடிவுரையாற்றினார். அதன் சுருக்கம் :

"இன்று உலகின் பல பகுதியிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள், வாழவொட்டாமல் விரட்டியடிக்கவும் படுகிறார்கள். நமது தமிழினத்துக்குப் பாதுகாப்பில்லை. அண்டை நாடான இலங்கையில் நம் உடன் பிறப்புகள் வதைக்கப்படுகிறார்கள். நம்மை ஒருமைப்பாட்டு மாயத்தால் இந்தியர்களாக்கி வைத்திருக்கும் தில்லியரசு என்னவென்று கேட்கவில்லை; கேட்காது. உள்நாட்டுக் குழப்பம் என்பார்கள். இன்று தமிழனுக்கென்று ஒரு வலுவான பேரரசு இருந்திருக்குமானால் இலங்கையரசு இவ்வாறு கூசாது கொடுமைகளைச் செய்யுமா ?

தமிழகப் பிரிவினையா என்று பதறித் துடித்துத் தாண்டித் தலைகுப்புற விழும் கோழைத் தமிழர்களே! உங்களை நோக்கிக் கேட்கிறேன். வாழச் சென்ற நாடுகளையெல்லாம் வளப்படுத்தி வாழ்வித்துவிட்டுக் கண்ணீருங் கம்பலையுமாய் வந்து நிற்கும் ஏதிலித் தமிழர்களை ஏன் தமிழ்நாட்டிலே குடியேற்றுகிறார்கள்? தில்லியிலோ கல்கத்தாவிலோ குடியேற்றுவதுதானே ? ஏன் எல்லோருமே இந்தியர்கள்தாமே? இனவுணர்வு மறைக்கப்படலாம்; ஆனால் மறுக்கப்படக் கூடியதன்று என்பதை உணருங்கள் !

பாக்கித்தான் ஆளுமையிலிருந்து வங்கத்தைப் பிரித்துவிட வரிந்து கட்டிக்கொண்டு நின்ற, வங்கத்தவர்களைத் தூண்டிவிட்ட, துணைபோன, இந்தியப் பொருளை வாரி வழங்கிவிட்டு வரியை உயர்த்தி இங்குள்ளவர்களை வாட்டி வதைக்கின்ற இந்திராவே ! உனது தில்லியாட்சியினின்று, வடக்கத்திய இடக்கர் ஆட்சியினின்று எங்கள் தமிழகத்தை விடுவித்துக் கொள்ள விரும்புகின்றோம். உன் இனமல்லாத, உன் மொழியினை விரும்பாத, உன் நாகரிகம் பண்பாடுகளுக்கு வேறுபட்ட தமிழர்களாகிய நாங்கள் தனிநாடு வேண்டுமென்றால், உனக்குப் பதட்டம் ஏற்படுவது ஏன் ? உன் கண்கள் எங்களைக் குற்றவாளிகளாகக் காண்பது ஏன் ?

ஏ, உலகாண்ட தமிழினமே! உலுத்தர்கட்கு அடிமைப்பட்டு ஒய்ந்து கிடந்தது போதும்! தலைசாய்ந்து கிடந்தது போதும்! பகையினை வீழ்த்தப் பாய்ந்துடன் புறப்படு! கோழைமை நீக்கு! கொத்தடிமை போக்க உன் குருதி கொதிக்கட்டும்! உன் நாடி நரம்புகள் புடைக்கட்டும்!''

இவ்வாறு தலைவர் கடன் முழக்கம்போல் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது, காவல் உண்ணோட்டகரும், காவலர்களும் மேடையைச் சூழ்ந்து, 'நீங்கள் சட்டத்திற்குப் புறம்பாகப் பேசுவதால் உங்களைச் சிறைப்படுத்துகிறோம்' என்று கூறிச் சிறைப்படுத்தினர்.

மாநாட்டு மேடையினின்றும் காவற்றுறை இயங்கி நின்ற இடம் வரை (அரைப் படைசால் தூரம்) மறவர்களை அழைத்துச் சென்றபோது, விடுதலைப் போர்க் கொடிகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டும், கோடையிடிபோல் கொள்கைகளை முழங்கிக்கொண்டும் சென்ற காட்சி மாநாட்டுக்கு வந்திருந்தவரே யன்றியும், மற்றும் கடற்கரைக்கு இயல்பாக வந்திருந்த அனைவரையும் வீறுபெறச் செய்தது. அவர்தம் கொள்கை முழக்கத்தை நெடுங்கடலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

பின் நிகழ்ச்சி :

15—7—75 அன்று இரவு, 'தமிழகப் பிரிவினை வீரர்களை உடனே விடுதலை செய்!'' என்னும் சுவரொட்டிகள், இயக்கத்தவரால் சென்னை மாநகரில் ஆங்காங்கு ஒட்டப்பெற்றன. இச்சுவரொட்டிகள் ஒட்டிய மூவர் கொண்ட ஒரு குழுவினைக் காவலர்கள் தடுத்து அழைத்துச் சென்று, அன்று இரவு, மறுநாள் பகல், இரவு முழுவதும் காவல் நிலையத்திலேயே உணவும் கொடுக்காது வைத்திருந்து 17—7—75 அன்று காலை 10 மணியளவில் விடுவித்தனர்.

அறமன்ற உசாவல்:

முன்கூட்டிச் சிறைப்படுத்தப்பெற்ற பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் முதலிய எண்மருள் திரு. அடியார் நீங்கலாக ஏனைய எழுவர்க்கும் 21—7—75 அன்றும், ஊர்வலத்தில் சிறைப்படுத்தப் பெற்ற, திரு. பாவை. நடவரசன் முதலிய எண்மருக்கும் 22—7—75 அன்றும், மாநாட்டில் சிறைப்படுத்தப்பெற்ற, திரு. கந்த. கண்ணன் முதலிய அறுவர்க்கும், 23—4—75 அன்றும். திரு. நீட்டோலை அடியார் அவர்களுக்கு, 25—7—75 அன்றும் உசாவல் நாள்கள் குறிக்கப்பட்டன.

21—7—75 அன்று உசாவலுக்கு அறமன்றம் அழைத்துச் செல்லப்பெற்ற பாவலரேறு. திரு. பெருஞ்சித்திரனார் முதலிய முதலணியினர் எழுவருக்கும் உசாவல் நாள் 4—8—75 அன்றும், ஏனைய இரண்டணியினர் பதினல்வருக்கும் உசாவல் நாள் 6-8-75 அன்றும் ஒத்தி வைக்கப்பெற்றன. O

3-ஆவது தமிழக விடுதலை மாநாட்டுத் தொடர்பாகச் சிறைபிடிக்கப்பட்ட மறவர்கள் !

முன்கூட்டிச் சிறை பிடிக்கப்பெற்றோர் :

* 1. பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார்.
2. "நீட்டோலை" அடியார்.
* 3. திரு. மறை. நித்தலின்பனார்.
4. ,, அரிமா மகிழ்கோ.
5. ,, நா. இளமாறன்.
* 6. ,, அடியார்க்கருளி.
7. ,, ந. வை. இளஞ்செழியன்.
* 8. ,, ப. முருகவேள்.

ஊர்வலத்தில் சிறை பிடிக்கப்பெற்றோர் :

9. திரு. பாவை நடவரசன்.
10. ,, பொற்செழியன்.
11. ,, சின்னத்துரை.
12 ,, சு. கதிரவன்.
13. ,, கோ. பழனி.
14. ,, துரை. மடங்கன்.
15. ,, வை. தமிழ்க்குமரன்.
16. ,; இரா. அருட்குவை.

மாநாட்டில் சிறை பிடிக்கப்பெற்றோர் :

17. திரு. கந்த. கண்ணன்.
18. ,, அரங்க. தமிழ்மணி.
19. ,, மா. ஆ. மாசிலாமணி.
20. ,, வாய்மை இளஞ்சேரன்.
21. ,, வேலிறையன்.
22. ,, சேலம் பாவரசன்.

* இக்குறியிட்ட பெயரினர், சென்ற மதுரை மாநாட்டிலும் சிறைப்பட்டவராவர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.